# திருஅருட்பிரகாச வள்ளலார்

சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.110/-

அருள்: 10 | சுபகிருது ஆண்டு/ வைகாசி-ஆனி / ஜூன் -2023 | ஜோதி: 6

மாத பூசத்திருநாள்: 21.6.2023 அடுத்த மாதம் பூசம்: 18.7.2023



தெய்வத்திரு.

**சதீஷ்ராஜ் அடிகளார்,**

நிறுவனர்

**தயவுத்திருமதி.**

**தனலட்சுமி அம்மையார்,**

ஆசிரியர், வெளியிடுபவர்

மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:

**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**

புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,

முதன்மைச்சாலை, சென்னை- 600011.

தொடர்புக்கு 044-25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| திருக்குறள் சன்மார்க்க உரை | 4 |
| ஜீவகாருணியத்தின் எல்லை | 5 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 6 |
| மகாத்மா காந்தியின் சுயசரிதை | 8 |
| அருட்பயணம் | 11 |
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 12 |
| அருள்விளக்க மாலை பாடல் | 17 |
| கடவுளுக்கு உயிர் பலி கொடுப்பது சரியா? | 20 |
| அனுபவ ஆனந்த தீபிகை உபதேச வினா-விடை | 22 |
| வீண் காலம் கழிக்காதீர் | 26 |
| அன்பர்களின் அனுபவங்கள் | 28 |
| ஒழிவில் ஒடுக்கம் | 30 |



# திருக்குறள்-சன்மார்க்க உரை

## பேதைமை

**(தன்னை உணராத் தன்மை)**

**பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு ஊதியம் போக விடல். 831**

தன்னை உணராத் தன்மை என்றால் ஐம்புலன் மனம் புதி சித்தம் அகங்காரம் முதலிய கருவிகளின் மூலம் கிடைக்கும் சிற்றின் லாபமாகிய கேட்டினை விரும்பி ஏற்று ஆன்ம இன்ப இலாபத்தினை கைவிட்டுக் கவலைப்படுவதாகும்.

**பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல். 832**

தன்னை உணராத் தன்மையின் முதன்மை குணம் தகுதியற்ற சிற்றின்ப நாட்டத்தில் மீளாது அழுந்திக் கெடுதலாகும்.

**நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணாமை பேதை தொழில். 833**

ஆன்ம உருக்கமில்லாத கடின சித்தத்திற்கு வெட்கப்பட மையும், அதனை அடையும் வழிமுறைகளைத்தேடாமையும், ஆன்மீ உருக்கமே தெய்வ வழிபாடு என்றாய்ந்து உணராமையும், கொலை புலை, களவு, காமம் பொய்மையைத் தழுவிக்கொள்ளுதலுமே தன்னை உணரத்தகாதவன் தன்மையாகும்.

**ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையின் பேதையார் இல். 834**

உயிரிரக்கம் படித்தறிந்த முட்டாளாகியும் அதனைச் செய்வதால் ஆதாயம் பெறலாம் என விமர்சித்தும் தன் ஆன்மா சுத்தமாக வைத்திருக்க முயலாமையுமே தன்னை உணராதவன் தன்மையாகும்.

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான்புக் கழுந்தும் அளறு. 835**

காமமே கடவுள் இன்பம் எனக் கருதி அதை அடைவதற்குக் காரியப்படும் தன்னை உணராதவன் எழு பிறப்பிலும் சேற்றிலேவே மாறிமாறிப் பிறந்து மயங்கிவிழுவான்.

**பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப் பேதை வினைமேற் கொளின். 836**

தன்னை உணராதவன் செய்யும் மனம் முதலியவற்றின் அலைவால் எற்படும் செயல்கள் வீணாகும். அத்துடன் தன்னைப் பிறவி தளைக்கு ஆட்படுத்தி மனித பிறப்பின் மாண்பினுக்கு ஆளாக்காமல் கெட்டழிவான்.

**ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை. 837**

ஆன்மநேய நெகிழ்ச்சியை அடைந்தறியாதவன் பெற்ற பெருங் குண வளப்பம், காமம் குரோதம் மயக்கம் மதம் மாச்சரியம் அகங்காரம் ஆகியவை. உண்டு துய்க்க, மனிதரும்பல்லுயிரும் உண்டு துய்க்காது வாழ்பவர் ஆவர்.

**மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன் கையொன்று உடைமை பெறின். 838**


பித்தும் பேயும் பிடித்தவனாகும் தன்னை உணராதவன் பெற்ற தகுதிப்பாடு.

**பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண் பீழை தருவதொன்று இல். 839**

தன்னை உணராதவன் பெற்ற கேவிராம் கற்றம் இன்பமே! ஏன் எனில் அச் சுற்றத்தை இழந்து உயிர்இரக்கச் சுற்றத்தினரை நட்பாக்கிக் கொள்ளுதலால்.

**கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்து பேதை புகல். 840**

மும்மலத்தில் அழுந்தி இருள் நிலையைப் போக்கிடாதவன் சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளம் என்னும் சான்றோர் பீடமாம் திருப்பள்ளியுள் புகுவதைப் போன்றது தன்னை உணராதவன் செய்யும் தகைமை.



## ஜீவகாருண்யத்தின் எல்லை

ஜீவகாருண்யத்தைக் குறித்துச் சில அன்பர்கள் நெடு நேரம் வாசாஞானமாய்ப் பேசிக் கொண்டிருந்ததை வள்ளலார் அறிந்து "ஜீவகாருண்யம் எவ்வளவு தூரம் பரந்துள்ளது அறிவீர்களா ?" என்று கேள்வி கேட்டு, "தெருவில் பெரியோர் இருவர் செல்லும் போது ஒருவர் கால்பட்டு மண்கட்டி உடைந்து விட்டது. அதைக் கண்ட மற்றொருவர் மூர்ச்சையாயினர். மற்றொரு பெரியவர் மூர்ச்சையானவரைக் காரணம் கேட்க, தமது காலினால் மண்கட்டியின் இயற்கைநிலையாகிய நேர்த்தி குலைந்து விட்டது தான் என்றனர்." என்று ஜீவகாருண்யத்தின் எல்லையை விளக்கினார்.

## நீதி நூலுக்கு சாற்றுகவி

தற்கால கம்பரென்று பாராட்டப்படும் திருவாடுதுறை யாதீனத்து மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தமது மாணவர் மாயூரம்-வேதநாயகம்பிள்ளை இயற்றிய நூல்களுக்கு வள்ளலாரிடமிருந்து சாற்றுகவி பெற வடலூர்க்குச் சென்றனர். வள்ளலார் சாற்றுகவி கொடுத்தனர். இங்கிதமாலையைப் பற்றி விளக்கும்படி மகாவித்துவான் கேட்க, வள்ளலார் முதற்பாட்டிற்கு மட்டும் பலவுரை நான்குமணி நேரமாகச் சொல்லிக் கொண்டு வந்து, இங்கே முதலியாரப்பாவும் கைவிட்டார். என்று கூறிப் பேரின்பவுரை சொல்லிக் கொண்டே போக மகாவித்துவானும் ஒன்றுந் தோன்றாமல் இருந்தனர். அப்போது மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் வள்ளலாரைப் பெரிதும் புகழ்ந்தனர்.

- 6ம் திருமுறை

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**சித்திஎன் பதுநிலை சேர்ந்த அநுபவம் அத்தி றல் என்றஎன் அருட்பெருஞ் ஜோதி 252**

சித்தியாவது சிவஇன்பத்தை ஆன்மா பெற்று அனுபவிக்கும் முத்தி நிலையை யும் தாண்டிய நிலையாகும். ஆன்மா சிவத்துடன் இரண்டறக் கலந்து அதுவா கவே ஆகிவிடும் இறுதி நிலை இதுவே ஆகும். இதுவே ஆன்மா அடையும் வெற் றியின் இறுதிப் படியாகும் எனத் தெரி வித்தருள்வது அருட்பெருஞ் சோதி. (‘கட வுளும் நானும் ஒன்றானேன்” திருமந்திரம் 2918; “நான் அவனை உற்றே கலந்தேன் ஒன்றானேம்“ அருட்பா 5486)

**ஏகசிற் சித்தியே இயல்உற அனேகம் ஆகியது என்றஎன் அருட்பெருஞ் ஜோதி 254**

ஒன்றான சிவஞான சித்தியே எங்கும் பொருந்துமாறு, இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களும் பொருள்களும் தோற் றங்களும் மற்றெல்லாமும் ஆகி, மிகப்பல வாய் விரிந்து விளங்குகின்றது என அரு ளுவது அருட்பெருஞ் ஜோதி.

**இன்பசித் தியின்இயல் ஏகம் அனேகம் அன்பருக்கு என்றஎன் அருட்பெருஞ் ஜோதி 256**

அழிவில்லாத ஞான சித்தியின் விளை வாகிய உண்மை இன்ப இயல்பு ஒன்றாக வும், பலவாகவும் இருந்து வெளிப்படுவது, மெய்யன்பு நிரம்பியவர்களுக்காகவே என அருளியது அருட்பெருஞ் ஜோதி.

**எட்டுஇரண்டு என்பன இயலும்முற் படிஎன**



**அட்டநின்று அருளிய அருட்பெருஞ் ஜோதி 258**

*தமிழ் எண் வகையில் எட்டாகிய "அ"கரமும், இரண்டாகிய "உ"கரமும் சேர்ந்து இயங்குவது பிரணவம் என அறிவித்து, அதுவே ஞானத்துக்கு முதற் படி என், மேலான அவ்விடத்தே நின்று ஞானக் காட்சிக்கு விளங்க அருளுவது அருட்பெருஞ் ஜோதி.*

*(வேறு)*

*அகாரமாகிய உயிரையும், உகாரமாகிய இறைவனையும், முழுமையாக அறிந்து கொள்வதே முதல்படி ஆகும் என, ஞான நிலையில் நின்று அருளியது அருட்பெருஞ் ஜோதி.*

**இப்படி கண்டனை இனிஉறு படியெலாம்**
**அப்படி யேஎனும் அருட்பெருஞ் ஜோதி 260**

*ஞானப் பேற்றுக்கான படிமுறைகளையும், சிவத்தின் அக, புற உண்மைகளையும் இவ்வாறு காட்டக் கண்டாய், இனி அடையப் பெறும் நிலைகள் யாவும் அவ்வாறே கண்டு கொள்க, என விளக்கி அருள்வது அருட்பெருஞ் ஜோதி.*

**படிமுடி கடந்தனை பார்இது பார்என**
**அடிமுடி காட்டிய அருட்பெருஞ் ஜோதி 262**

*உலகியல் அறிவு, உயிர் அறிவு, இரு வகைகளையும் கடந்து நீ நிற்கின்றாய், அருளறிவு பெற்று உலகம், இறை இவற்றின் உண்மையைத் தெளிந்து, சிவத்தின் திருவடி திருமுடி நிலைகளைக் காண்க, எனக் காட்டியருளியது அருட்பெருஞ் ஜோதி.*

**ஜோதியுள் சோதியின் சொரூபமே அந்தம்**
**ஆதிஎன்று அருளிய அருட்பெருஞ் ஜோதி 264**

*காணும் புற ஒளிகளுக்கெல்லாம் உள்ளொளியாய் விளங்குவது, இறை ஒளியின் இயற்கை உண்மைத் தன்மையாகும்; அதுவே எல்லா ஒளிகளுக்கெல்லாம் முதலும் முடிவுமாகும் என அருள்வது அருட்பெருஞ் ஜோதி.*

**இந்தசிற் சோதியின் இயல்உறு ஆதி**
**அந்தம்என்று அருளிய அருட்பெருஞ் சோதி 266**

*இங்கு கூறிய இறை ஞான ஒளியின் இயல்பான தன்மை, ஆன்ம ஒளிக்குத் தோற்றமும் முடிவுமாய் விளங்குவதாகத் தெரிவித்தருளியது அருட்பெருஞ் ஜோதி.*

**ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே**
**ஆதிஎன்று அருளிய அருட்பெருஞ் ஜோதி 268**

*இறைநிலை (முதன்மை), ஆன்மநிலை (முடிவு) இவற்றின் தன்மைகளை நீ அறிந்து கொண்டாய், ஆதலால் நீயே அச் சிவசோதி உருவமாவாய் எனக்கூறி அருளியது அருட்பெருஞ் ஜோதி.*

**நல்அமுது என்ஒரு நாவுளம் காட்டிஎன்**
**அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி 270**

*இறை அருள் அனுபவமாகிய நல் அமுதம், எனது நாக்கின் அடியிலும், உள்நாக்குக்கு மேலும் சுரந்து இனிப்பது உணர்த்தி, என்னுடைய பிறவியாகிய துன்பத்தைப் போக்கியது அருட்பெருஞ் ஜோதி.*

**கற்பகம் என்உளம் கைதனில் கொடுத்தே**
**அற்புதம் இயற்றுஎனும் அருட்பெருஞ் ஜோதி 272**

*அருள் அமுதமாகிய திருவருள் ஞானத்தை (நினைத்ததைத் தரும் மேன்மையுடையது), என் உள்ளங்கைகளில் கொடுத்து, உலக மக்கள் அருள் இன்ப வாழ்வுக்குத் திரும்ப, அருள் அதிசயம் செய்வாயாக என்று என்னைப் பணித்தது அருட்பெருஞ்ஜோதி.*

சென்ற மாதத் தொடர்ச்சி...



# மகாத்மா காந்தியின் சுயசரிதை...

-நான்காவது பாகம்

## 14 கூலிகளின் ஒதுக்கலிடங்கள்

நமக்கு மிகப் பெரிய சேவை செய்து வரும் வகுப்பினர் உண்டு. ஆனால், ஹிந்துக்களாகிய நாம், அவர்களைத் 'தீண்டாதார்' என்று சொல்லுகிறோம். பட்டணம் அல்லது கிராமத்தின் ஒதுக்குப்புறமான இடங்களில் அவர்களை ஒதுக்கியும் வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட சேரிகள் குஜராத்தியில் 'டேட்வாடா' என்று சொல்லப்படுகின்றன. அப் பெயருக்கு இழிவையும் கற்பித்திருக்கிறோம். கிறிஸ்தவ ஐரோப்பாவில் இப்படித்தான் யூதர்கள் ஒரு சமயம் 'தீண்டாதோர்' ஆக இருந்தனர். அவர்கள் குடியிருக்க ஒதுக்கப்பட்டிருந்த இடத்தைக் 'கெட்டோக்கள்' என்ற இழிவான பெயர் கொண்டும் கூறி வந்தார்கள். அதே வழியில் இன்று நாம் தென்னாப்பிரிக்காவில் தீண்டாதவர்களாக இருக்கிறோம். ஆண்டுரூஸின் தியாகமும், சாஸ்திரியாரின் மந்திரக் கோலும் நம் கஷ்டங்களைப் போக்குவதற்குஎவ்வளவு தூரம் பயன்படப் போகின்றன என்பது இனிமேல்தான் தெரிய வேண்டும். புராதன யூதர்கள், தாங்களே கடவுளின் அன்புக்குப்பாத்திரமான மக்கள் என்றும், மற்றவர்களெல்லாம் அப்படியல்ல என்றும் எண்ணிக் கொண்டார்கள். இதன் காரணமாக அவர்களுடைய சந்ததியார் விசித்தரமானதும் அநீதியானதும் ஆன வினைப் பயனை அனுபவித்தாக வேண்டியவர்களாயினர். அநேகமாக அதே மாதிரியே ஹிந்துக்கள், தாங்கள் ஆரியர்கள் அல்லது நாகரிகமானவர்கள் என்று எண்ணிக் கொண்டனர்.தமது சொந்த உற்றார் உறவினரேயான ஒரு பகுதியினரை அநாரியர்கள் அல்லது தீண்டாதார் என்று ஒதுக்கித் தள்ளினர். இதன் பயனாக, அநீதியானதேயென்றாலும் விசித்திரமான கர்ம பலன், தென்னாப்பிரிக்காவில் ஹிந்துக்களின் தலைமீது மாத்திரமல்ல, தங்கள் ஹிந்து சகோதரர்களைப் போல் அதே நிறத்தினரான முஸ்லிம்கள், பார்ஸிகள் ஆகியவர்கள் தலைமீதும், அவர்கள் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதனால், இப்பொழுது விடிந்திருக்கிறது.

இந்த அத்தியாயத்தை 'ஒதுக்கலிடங்கள்' என்ற தலைப்புடன் ஆரம்

பித்தேன். அதன் பொருளை ஓரளவுக்கு வாசகர் இப்பொழுதுபுரிந்துகொண்டிருப்பர். தென்னாப்பிரிக்காவில் 'கூலிகள்' என்ற கேவலமான பெயரை நாம் பெற்றிருக்கிறோம். இந்தியாவில் 'கூலி' என்றால், சுமை தூக்குகிறவர், கூலிக்கு வேலை செய்பவர் என்றுதான் பொருள். ஆனால் தென்னாப்பிரிக்காவிலோ அதற்கு அவமரியாதையான பொருள் இருக்கிறது. 'பறையன்' தீண்டாதான்' என்ற சொல்லுக்கு நாம் என்ன பொருள் கொள்ளுகிறோமோ அப்பொருளே தென்னாப்பிரிக்காவில் 'கூலி' என்பதற்குக்

கொடுக்கப்படுகிறது. 'கூலி'களுக்குக் குடியிருக்கக் கொடுக்கப் பட்டிருக்கும் இடங்கள் 'கூலி' ஒதுக்கலிடங்கள்' என்று சொல்லப்படுகின்றன. அப்படிப்பட்ட ஓர் ஒதுக்கலிடம் ஜோகன்னஸ்பர்க்கில் இருக்கிறது. ஆனால், ஒதுக்கலிடமுள்ள மற்ற இடங்களில் இந்தியருக்குச் சாசுவதக் குடிவார உரிமை இருப்பது போல் இங்கே இல்லை. ஜோகன்னஸ்பர்க்கில் அப்பகுதியில் இந்தியர், மனைகளை 99 வருடக் குத்தகைக்கு வாங்கிக் கொண்டிருக்கின்றனர். அப்பகுதியில் ஜனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்றாற்போல விஸ்தீரணம் அதிகரிக்கப்படவில்லை. ஆகையால், அவ்விடத்தில் மக்கள் நெருக்கமாகவே வசிக்க நேர்ந்தது. அரை குறையான வகையில் கக்கூசுகளைச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்திருந்ததைத் தவிர முனிசிபாலிடி அப்பகுதியில் வேறு எந்தவிதமான சுகாதார வசதியும் செய்யவே இல்லை. அங்கே நல்ல பாட்டைகளோ, விளக்குகளோ இல்லை. அங்கே குடியிருந்தவர்களின் நலனிலேயே இது சிரத்தையில்லாமல் இருந்தபோது, அப் பகுதியின் சுகாதாரத்தை அது பாதுகாக்கும் என்பதற்கு இடமே இல்லை. அங்கே குடியிருந்தவர்களோ, நகரசபையின் சுகாதார விதிகளையும் சுகாதாரத்தையும் பற்றி ஒன்றுமே அறியாதவர்களாகையால், நகரசபையின் உதவி அல்லது கண்காணிப்பு இல்லாமல் அவர்கள் எதுவும் செய்துகொள்ள முடியாது. தென்னாப்பிரிக்காவுக்குச் சென்ற இந்தியர், ராபின்ஸன் குருஸோக்கலாக இருந்திருப்பார்களாயின், அவர்கள் கதை வேறு விதமாக இருந்திருக்கும். ஆனால், ராபின்ஸன் குருஸோக்களாகக் குடியேறிய நாடு ஒன்றேனும் உலகில் இருப்பதாக நாம் அறியோம்.

பொதுவாகச் செல்வத்தையும் வர்த்தகத்தையும் தேடிக்கொண்டே மக்கள் வெளிநாடுகளில் போய்க் குடியேறுகிறார்கள். ஆனால், தென்னாப்பிரிக்காவுக்குச் சென்ற இந்தியரில் பெரும்பாலானவர்கள், ஒன்றும் தெரியாத பரம ஏழை விவசாயிகள். ஆகையால், அவர்களுக்கு அளிக்க வேண்டிய எல்லாக் கவனமும் பாதுகாப்பும் அவர்களுக்குத் தேவை. அவர்களைத் தொடர்ந்து அங்கே சென்ற வியாபாரிகளும், படித்த இந்தியரும் மிகச் சிலரே.

நகரசபையின் அக்கிரமமான அசிரத்தையும், அப்பகுதியில் குடியிருந்த இந்தியரின் அறியாமையும் சேர்ந்து அவர்கள் குடியிருந்த இடத்தை முற்றும் சுகாதாரக் கேடானதாக்கி விட்டன.

அப்பகுதியின் நிலைமை அபிவிருத்தியடையும்படி நகரசபை ஒன்றுமே செய்யாமல் இருந்ததோடு, தங்களுடைய சொந்த அசிரத்தையினால் ஏற்பட்ட சுகாதாரக் கேட்டை, அப்பகுதியையே அழித்து விடுவதற்கு ஒரு சாக்காகவும் உபயோகித்துக்கொண்டது. அந்த இடத்தில் குடியிருக்கும் உரிமையை இந்தியரிடமிருந்து பறித்துவிட உள்ளூர்ச் சட்டசபையின் அதிகாரத்தையும் பெற்றது.

நான் ஜோகன்னஸ்பர்க்கில் குடியேறியபோது அங்கே இருந்த நிலைமை இதுவே. குடியேறியிருந்தவர்களுக்குத் தங்கள் சொந்த நிலத்தில் சொத்துரிமை இருந்ததால் இயற்கையாகவே நஷ்டஈடு பெற வேண்டியவர்களாகின்றனர். சில ஆர்ஜித வழக்குகளை விசாரிப்பதற்கு என்று ஒரு விசேட நீதிமன்றம் அமைத்தார்கள். நகரசபை கொடுக்க முன்வரும் தொகையை ஏற்றுக்கொள்ளத் தயாராக

இல்லாத இந்தியருக்கு அந்த நீதிமன்றத்திடம் அப்பீல் செய்துகொள்ள உரிமை உண்டு. அந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் தொகை, நகரசபை கொடுக்க முன் வந்த தொகையைவிட அதிகமானதாக இருந்தால் நகரசபையே செலவுத் தொகையையும் கொடுக்க வேண்டும்.

அங்கே குடியிருந்தவர்களான இந்தியரில் பெரும்பாலானவர்கள் என்னையே சட்ட ஆலோசகராக வைத்துக் கொண்டனர். இந்த வழக்குகளின் மூலம் பணம் சம்பாதிக்க எனக்கு விருப்பமில்லை.

ஆகையால், அவர்களிடம் ஒன்று கூறினேன். வழக்கில் வெற்றி பெற்றால், நீதிமன்றம் என்ன செலவுத் தொகைக்குத் தீர்ப்புச் செய்கிறதோ அதுவே எனக்குப் போதும்; வழக்கின் முடிவு எதுவானாலும் ஒவ்வொரு வழக்குக்கும் எனக்குப் பத்து பவுன் கட்டணம் கொடுக்க வேண்டும் என்று கூறினேன். அவர்கள் இவ்விதம் கொடுக்கும் பணத்தில் ஒரு பாதியை ஏழைகளுக்கு வைத்திய சாலையோ அல்லது அத்தகைய வேறு ஸ்தாபனமோ ஆரம்பிக்க ஒதுக்கி வைத்து விடப் போகிறேன் என்பதையும் அவர்களிடம் சொன்னேன். இயல்பாகவே இது அவர்கள் எல்லோருக்கும் திருப்தியளித்தது. எழுபது வழக்குகளில் ஒன்றுதான் தோற்றுப் போயிற்று. ஆகவே, பெருந் தொகையே கட்டணமாகக் கிடைத்தது. வந்ததையெல்லாம் விடாமல் விழுங்கிக் கொண்டிருக்க ‘இந்தியன் ஒப்பீனியன்’ பத்திரிகை இருந்தது. இதுவரையில் அது 1600 பவுன் விழுங்கியிருக்கிறது என்பது எனக்கு ஞாபகம். இந்த வழக்குகளுக்காக நான் கஷ்டப்பட்டு வேலை செய்தேன். கட்சிக்காரர்கள் எப்பொழுதும் என்னைச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள். இவர்களில் பெரும்பான்மையோர், முன்னால் பீகாரிலிருந்தும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் வந்தவர்கள். தங்களுடைய குறைகளுக்குப் பரிகாரம் தேடிக்கொள்ளுவதற்கென்று, சுயேச்சையான இந்திய வர்த்தகர்களின் சங்கத்தின் தொடர்பு இல்லாமல், தனியாக ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டு இருந்தார்கள். இவர்களில் சிலர், கபடமில்லாதவர்கள்; தாராள குணம் உள்ளவர்கள்; உயர்ந்த ஒழுக்கம் உள்ளவர்கள். இவர்களுடைய தலைவர்கள் சங்கத் தலைவரான ஸ்ரீ ஜெயராம் சிங்கும், சங்கத் தலைவரைப் போன்றே இருந்த ஸ்ரீ பத்ரியும் ஆவார். அவர்கள் இருவரும் இப்பொழுது காலமாகி விட்டனர். அவர்கள் எனக்குப் பெரும் அளவு உதவியாக இருந்தார்கள். ஸ்ரீ பத்ரி என்னுடன் நெருங்கிப் பழகியதோடு சத்தியாக்கிரகத்திலும் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டார்.

அவர்களையும் மற்ற நண்பர்களையும் கொண்டு, வடக்கிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் வந்து குடியேறி இருந்த அநேக இந்தியருடன் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. வெறும் சட்ட ஆலோசகர் என்பதைவிட அவர்களுக்கு நான் சகோதரனாகவே ஆகிவிட்டேன். மறைவாகவும், பகிரங்கமாகவும் அவர்கள் அனுபவித்த துக்கங்களிலும் கஷ்டங்களிலும் நானும் பங்கு கொண்டேன்.

அங்கே இந்தியர் என்னை எப்படி அழைத்து வந்தார்கள் என்பதை அறிவது கொஞ்சம் ருசிகரமானதாகவே இருக்கக்கூடும். காந்தி என்று என்னைக் கூட்பிட அப்துல்லா சேத் மறுத்துவிட்டார். அதிர்ஷ்டவசமாக யாரும் என்னை ‘சாஹேப்’ (துரை) என்று கருதவோ, அப்படி அழைத்து என்னை அவமதிக்கவோ இல்லை. அப்துல்லா சேத் சிறந்த சொல் ஒன்றைக் கண்டுபிடித்தார். ‘பாய்’, அதாவது சகோதரர் என்பது தான் அச்சொல். மற்றவர்களும் அதையே பின்பற்றி, நான் தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்துவிடும் வரையில் என்னை ‘பாய்’ என்றே கூப்பிட்டு வந்தார்கள். முன்னால் ஒப்பந்தத் தொழிலாளராக இருந்த இந்தியர் இப்பெயரால் என்னை அழைத்த போது அதில் இனிமையானதொரு மணம் கமழ்ந்தது.



# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்று, அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்த புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாத பூச நாள்: 21-06-2023**

**குறிப்பு: அடுத்த பயணம்: 18-07-2023**

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## 55. சுத்த சன்மார்க்க விளக்கம்

உலகம் தோன்றிய காலத்திலிருந்து சுத்த சன்மார்க்கம் என்பது இன்று வரை நூற்றி எண்பத்து ஒன்பது ஆண்டுகட்கு முன்னர், திருவருட் பிரகாசர் வருவிக்க உற்றதனால் பெற்றது இந்த உலகம். ஆனால் ஐந்தாயிரம் ஆண்டுகட்கு முன்னர் திருமூலர் காலத்தில் சன்மார்க்கம் என்றதோடு சேர்த்து நான்கு மார்க்கங்கள் தமிழகத்தில் இருந்தனவாகும். ஆனால் இதுவரையும் எந்த ஒரு ஞானிக்கும் சுத்த சன்மார்க்கம் என்பதை ஆண்டவர் உணர்த்தவே இல்லை. பெருமானை இவ்வுலகிற்கு வருவிக்க உற்றதே சமரச சுத்தசன்மார்க்கத்தை, அந்த நெறியை இவ்வுலகம் பெற்று மரணமற்று வாழவே ஆகும்.

தயவு, கருணை, இரக்கம் ஆகியவற்றையே தன் நெறியாகக் கொண்டு வாழ்வித்துக் காட்டிய வள்ளலார் போன்று வேறு யாரும் இதற்காக வரவே இல்லை. மரணம் இல்லாத பெருவாழ்வு சாத்தியமே என்ற சமரச சன்மார்க்கக் கொள்கையை யாரும் முன்னிறுத்தி வாழவும் இல்லை. அதனை உலக மக்களுக்குப் போதிக்கவும் இல்லை.

சுத்த சன்மார்க்கத்தை உலகறியச் செய்ய வருவிக்க உற்ற வள்ளலாருக்கு ஆண்டவர் சுத்த சன்மார்க்க விதிமுறைகளை தனக்கு ஆண்டவர் அறிவித்த வண்ணம் ஒரு அருட்பாவை வள்ளலார் பாடியுள்ளார். பாடலைப் பார்ப்போம்.


**சாகாத கல்வியே கல்வியொன் றேசிவம்**
**தானென அறிந்த அறிவே**
**தகுமறிவு மலமைந்தும் வென்றவல் லபமே**
**தனித்த பூ ரணவல்லபம்**
**வேகாத காலாதி கண்டு கொண் டெப்பொருளும்**
**விளையவிளை வித்த தொழிலே**
**மெய்த் தொழில் ஆகுமிந் நான்கையும் ஒருங்கே**
**வியந்தடைந் துலக மெல்லாம்**
**மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை**
**வானவர மேஇன்பமாம்**
**மன்னுமிது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்**
**மரபென் றுரைத்த குருவே-3678**

சாகாத கல்வியே கல்வி, 2. ஒன்றே சிவம் தான் என அறிந்த அறிவே தரும் அறிவு. 3. மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம், 4. வேகாத ஆதிகாலைக் கண்டு கொண்டு அதனை அடைந்து உலகில் எந்த ஒரு பொருளையும் விளைவித்துத் தரும் தொழிலே மெய்த் தொழில் என நான்காக்கி தந்துள்ளார் ஆண்டவர்.

இவ்வளவும் பெற்ற சுத்த சன்மார்க்கத்தை முழுதும் பெற்றவர் வள்ளலார் ஒருவரே. இந்தப் பாடலைச் சன்மார்க்கிகள் ஒவ்வொருவரும் தம் நெஞ்சிறுத்தி மகிழ்ந்து அனுபவிக்கவும்.

## 56. சுத்த சன்மார்க்க அனுபவச், சுதந்தரம் பெற்றது

சுத்தசன்மார்க்கம் என்பது, சாகாத கல்வி, ஒன்றே சிவம் அதுதான் என அறியும் அறிவு, மலம் ஆகிய ஆணவம், கன்மம், மாயை, மாமாயை, திரோதாயி என்ற ஐந்தினையும் வென்ற வல்லபம்,



வேகாத கால், போகாத புனல், சாகா தலையை கண்டு கொண்டு உலகில் எப்படிப் பட்ட பொருளை யும் தானே விளைவித்துத் தரும் தொழில் என நான்கு பெரிய நிலைகளை உடையது. இக் கருத்தை 3678ம் பாடலாக அருட்பாவில் கூறியுள்ளார் வள்ளலார்.

மேற்கண்ட நான்கு நிலைகளே சன்மார்க்கம் என்று ஆண்ட வரே கூறியதாக அப்பாடலில் குறிப்பிடு கிறார் வள்ளலார்.

இந்த நான்கு நிலைகளின் அனுபவம் வாய்த்தவர் வள்ளலார் ஒருவரே. இதனை யும் ஆண்டவரே கூறுகிறார். சுத்த சன் மார்க்க அனுபவம் உனக்கே சுதந்தரம் ஆனது உலகில் என்று.

ஆக, சுத்த சன்மார்க்க நிலைகள் இது என்று கூறி, அந்நிலைகளின் அனுபவத்தை யும் வள்ளலார் ஒருவருக்கே தந்துள்ளார் அருட்பெருஞ் சோதி ஆண்டவர்.

ஆண்டவருக்கே இதுவரை தோன்றிய ஞானிகளில் வள்ளலாரே திறம் மிக்க வர் என உணர்ந்தே சன்மார்க்கத்தையும், அதனது அனுபவச் சிறப் பையும் அறிந்து வருவிக்க வைத்துள்ளார். பாடலைப் பார்ப்போம்.

**துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச்**
**சூழ்ந்ததுருள் ஒளிநிறைந்தே**
**சுத்த சன்மார்க்க அனுபவம் நினக்கே**
**சுதந்தர மதான துலகில் 3676**

## 57. உலக உயிர்கள் எல்லாம் இன்புற்று வாழ வள்ளலார் நினைத் தது போன்று யாரும் நினைக்க வில்லை. இது ஆண்ட வரே கூறியது.

“எல்லா உயிர் களும் இன்புற்று வாழ்க” என வள்ள லார் நினைத்தது போன்று மனி தர்களில் யாரும் நினைந்திடவில்லை. நினைந்து ஆண்டவரி டம் வேண்டவில்லை. எல்லா உயிர்களும் இன் புற்று வாழ வேண்டும் என்பதை இன்னும் தெளி வாகவே ஆண்டவரிடம் விண்ணப்பமாக வைத்தார் வள்ளலார் எப்படி எனில்

நெஞ்சம் கல்போன்று இறுக்கமாக இல்லாமல், அதன் கடினத் தன்மையை நீக்கி, உயிர்கள் எல்லாம் நல்ல வழியில் வாழ்வதற்குரிய வழிகளை ஆண்ட வரே நீர் ஆக்கித் தந்து, மெய்மையான வாழ்க்கையை எல்லா உயிர்களும் பெற்று, மிக மிகப் பெற்றிட வேண்டும். அத்தோடு அவ்வுயிர்கள் எல்லாம் நிலைபேறு பெற்ற உயிர்களாக சாவா நிலையைப் பெற்று, உலக உயிர்கள் எல்லாம் களிப்புற்று வாழ அருள்புரிய வேண்டும் என வள் ளலார் வேண்டியது போல, இதுவரை யாரும் அவ்வளவு இரக்கத்தோடு வேண் டிடவில்லை. அவ்வளவு இரக்கத்தோடு வேண்டினாராம் வள்ளலார். வள்ளலா ரது உயிர் இரக்கத்தைக் கண்டு ஆண்டவ ருக்கே வியப்பு வந்தது.

இதனை ஆண்டவரே குறிப்பிடுவது தான் வள்ளலாரது மிகப் பெரும் பேறு. இதுதான் வள்ளலார் மட்டுமே பெற்ற வரமாகும். பாடலைப் பார்ப்போம்.

**வன்பெலாம் நீக்கிநல் வழியெலாம் ஆக்கிமெய்**
**வாழ்வெலாம் பெற்று மிகவும்**
**மன்னுயிரெ லாம் களித்திட நினைத்தனை உன்றன்**
**மனநினைப்பின் படிக்கே**
**அன்பநீ பெறுக உலவாதுநீ டூழிவிளை யாடுக-3676**





அருள்ஜோதி
அன்ன ஆலயத்தின்
மூலமாக நடைபெறுகின்ற
பசியாற்றுவித்தல் சேவையில்
பங்கு கொள்ளுகின்ற
**அன்ன ஆலய
இல்லத்தார்கள்**



















நமது அருள்ஜோதி
குருகுல பாடசாலையில்
விடுமுறை நாட்களில்
மாணவர்களுக்கான
நற்பண்பு முகாம்
சிறப்பாக நடைபெற்றது






# அருள்விளக்க மாலை பாடல்

**இச்சைஒன்றும் இல்லாதே இருந்த எனக்கிங்கே**
**இயலுறுசன் மார்க்கநிலைக் கிச்சையை உண்டாக்கித்**
**தச்சுறவே பிறமுயற்சி செயுந்தோறும் அவற்றைத்**
**தடையாக்கி உலகறியத் தடைதீர்த்த குருவே**
**எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம் பலத்தை**
**இருந்தஎன எனக்கருளி இசைவித்த இறையே**
**முச்சகமும் புகழுமணி மன்றிடத்தே நடிக்கும்**
**முதல்அரசே என்னுடைய மொழியும் அணிந்தருளே**

## விளக்கம்



வள்ளல் பெருமானாரின் ஆசை எவற்றின் மீதும் பற்று இல்லாமல் எப்பொழுதும் கருணையின் வடிவாகவே இருக்க நினைக்கின்றார். ஆகவே வள்ளலார் எவற்றின் மீதும் இச்சை அற்று இருந்ததினால் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சன்மார்க்க இச்சையை உண்டாக்கினார்.

சன்மார்க்க உண்மையை உண்டாக்கி அதனை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளும்படி தூண்டி அந்த முயற்சிக்கு இடையூறாக வேறு ஏதேனும் பிற முயற்சி செய்ய ஆரம்பித்தால் அதற்கு இடம் கொடுக்காது தடை செய்து விடுகின்றார். எல்லா பற்றுதலையும் ஒழித்து விட்டு சுத்த சன்மார்க்க நெறியில் செல்வதற்கு யாதொரு தடையும் இல்லாமல் செய்து அந்நெறியில் நடக்க உதவிய அருட்பெருஞ்ஜோதியே!

எனது உண்மை தெய்வம் நீயாய்இருக்கின்றாய்,சமயங்களில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என்று வேறுபடாமல் எச்சமய முடிபுகளும் திருச்சிற்றம்பலம் தான் என்று இவ் உண்மைத் தன்மையை அடையும் படியாக எனக்கருளி இசைவித்த இறையே! இந்த பிரபஞ்சம் முழுவதும் இறைவனின் பேரருளால் விளங்குகின்றது. மனிதன் வாழ்ந்து அனுபவிக்கின்ற கர்மபூமி, ஞானபூமி, கனவு அனுபவங்கள் எல்லாம் விளங்குகின்ற சூக்குமஅகவலகம், இவை மூன்றுமே முச்சகம் ஆகும். முச்சகமும் போற்ற மணிமன்றிடத்தில் நடித்துக் கொண்டிருக்கின்ற முதல் அரசே என்னுடைய மொழியும் ஏற்றருளே.







# பழனியில் உள்ள நம
# அருள்ஜோதி அன்ன ஆல
# ஆண்டு விழா நிகழ்வ







# து
# யத்தின்
# புகள்







# கடவுளுக்கு உயிர் பலி கொடுப்பது சரியா?

## மாமிச உணவை மறுப்பதே மனித நெறி

ஒரு சிறு கதை:– ஒரு ஊரில் குயவன் ஒருவன் பானைகளை செய்து கொண்டிருந்தான். அங்கு ஏராளமான பானைகள், குடங்கள், சட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. அவன் அருகில் ஒரு ஆடு கட்டி போடப்பட்டிருந்தது. அவ்வப்போது அது மே மே என்று கத்திக் கொண்டிருந்தது. வயதான மகான் ஒருவர் மெல்ல நடந்து அங்கே வந்தார். குயவன் பானை செய்வதை பார்த்தப்படியே தரையில் அமர்ந்தார். வந்தவருக்கு ஒரு சிறு மண் சட்டியில் குடிக்கத் தண்ணீர் கொடுத்தான் அந்த குயவன். அதை வாங்கி குடித்த மகான்... இந்த ஆட்டை நீ வளர்த்து வருகிறாயா? என்று கேட்டார். இல்லை சாமி இது ஏதோ காட்டாடு. இந்த பக்கமா வந்தது பிடித்து கட்டி போட்டேன் என்றான் குயவன். எதற்காக? என்று கேட்டார் மகான். பண்டிகை வரப்போகிறதே! இறைவனுக்கு பலி கொடுக்கலாம் என்றுதான்.... என இழுத்தான் குயவன்.



பலியா மகான் வியப்புடன் கேட்டார். ஆமாம் சாமி தெய்வத்துக்கு திருவிழா அன்றைக்கு பலி கொடுத்தால் விசேஷம். தெய்வம் மகிழ்ந்து வரம் கொடுக்கும். எல்லாம் சுபிட்சமாய் இருக்கும் என்றான்.

இதை கேட்ட மகான் எழுந்து தன் கையில் இருந்த மண்பானையை ஓங்கி தரையில் அடித்தார். பானை துண்டு துண்டாகச் சிதறியது. குயவன் திகைத்து நின்றான். துறவியை வெறித்துப் பார்த்தான். துறவி நிதானமாக கீழே குனிந்தார். சிதறிய மண்பானை சில்லுகளை ஒன்று விடாமல் அடுக்கி குயவனிடம் நீட்டினார். என்ன இது? ஏன் உடைத்தீர்கள் என்றான் குயவன் கோபமாக. உனக்கு பிடிக்குமே, பா? என்றான் மகான். என்ன உளறுகிறீர்கள்? என்னுடைய பானையை உடைத்து அடுக்கி என்னிடம் நீட்டுகிறீர்கள். இது எனக்குப் பிடிக்கும் என்று வேறு சொல்கிறீர்கள். கேலியா? கிண்டலா? வம்புக்கு இழுக்கிறீர்களா? அல்லது உங்களுக்கு பித்தா என்று ஆத்திரப்பட்டான். அப்படியெல்லாம் எதுவும் இல்லலையப்பா உண்மையான அன்புடன் தான் செய்தேன். மகான் சிறிதும் பதட்டப்படாமல் சொன்னார். நான் செய்த அந்தப் பானையில் என் உழைப்பு முழுவதும் அடங்கி இருந்ததே, அதை உடைக்க நான் எப்படி சம்மதிப்பேன். இது எனக்கு பிடிக்கும் என்று யார் உமக்குச் சொன்னது?

நல்லது. ஆண்டவன் படைத்த ஓர் உயிரை கதறக் கதற வெட்டிக் கொன்று பலியிடலாம் என்று யார் சொன்னது? இதை இறைவன் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு வரம் தருவான் என்று நீ எப்படி நம்புகிறாய்? எந்தத் தாய் தன் குழந்தை கதறுவதைக் கேட்டு சகிப்பாள்? எந்தத் தகப்பன் தன் குழந்தை கொல்லப்படுவதை விரும்புவான்? குருவிடம் இருந்து அடுக்கடுக்காக கேள்விகள் பிறந்தன.

குயவன் மெதுவாக, நிதானமாக

ஆட்டின் கழுத்திலிருந்து கயிற்றை அவிழ்க்க தொடங்கினான். இறைவனிடம் என்ன இல்லை? உன்னிடம் என்ன உண்டு? அவர் எதைக் கேட்கிறார்? எதை நீ அளிப்பாய்? அவன் படைத்த உலகில், அவன் படைத்த நீ, அவன் படைத்த பொருட்களை நீ அவனுக்கு படைப்பாயா? இறைவனுக்கு நான் அதைச் செய்தேன். இதை செய்வேன் என்பதும், பதிலுக்கு அவன் அதை செய்வான், இதை செய்வான் என்பது வெறும் ஆத்ம வஞ்சனையே! எண்ணங்களால் மட்டுமே இறைவனை உணர முடியும். தூய மனத்தால் மட்டுமே இறை உணர்வை எய்த முடியும். சாதாரண மலர் எடுத்து அனுதினமும் அன்புடன் பூஜை செய்தாலே இறைவன் அகம் மகிழ்வான்.

நாம் எல்லா ஜீவன்களிடமும் அன்பு செலுத்தி வாழ்வதையே இறைவன் விரும்புகிறார். ஒரு உயிரை இறைவன் பெயர் சொல்லி, வெட்டி பலியிடுவது பாவச்செயலாகும். இது இறைவனுக்குப் பிடிக்குமா? என்று கேட்டார் அந்த மகான். அதற்கு எந்த பதிலும் அளிக்காமல் ஆட்டை அவிழ்த்துவிட்டுத் திகைத்து நின்றான் குயவன். எனவே நீங்கள் இறைவனுக்கு கொடுக்கும் இரத்தப்பலியை, கருணையற்ற செயலை கண்டிப்பாக இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டார். காரணம் நீங்கள் பலி கொடுக்கும் ஒவ்வொரு உயிரும் இறைவனுடைய குழந்தைகள். எனவே தயவு செய்து கடவுள் பெயரில் உயிர்களை பலி இடுவதை நிறுத்துங்கள். மாமிச உணவை தவிருங்கள். சைவ உணவே தெய்வ உணவு.

# உயர்ந்த தானம்

## ஸ்ரீ கிருபானந்த வாரியார்

**உ**யர்ந்த ஆடையும் உயர்ந்த அணிகலன்களும் அணிய வேண்டுமென்று தான் எல்லோரும் எண்ணுகிறார்கள். உயர்ந்த உணவு என்பதிலும் விருப்பம் தான். வீடு வாகனம் எல்லாமே உயர்வாக இருக்க வேண்டும் என்று தான் எண்ணம். அதுபோல் தானமும் உயர்ந்த தானமாகப் புரிய வேண்டும் என்று எண்ணுதலும், எண்ணியவாறு செய்தலும் அவசியம் அல்லவா? முக்தியுலகத்தின் முதல் வாயிலில் இரண்டு கதவுகள் உள்ளன. அவை இரண்டும் திறக்கப்பட வேண்டுமாயின் தானமும், தவமும் புரிதல் வேண்டும். தானத்தால் ஒரு கதவும், தவத்தால் ஒரு கதவும் திறக்கப்படும்.

**"தானமும் தவமும் தான் செய்வாராயின்**
**வானவர் நாடு வழி திறந்திடுமே"**

என்கிறார் ஔவையார்.

**கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்**
**காதுக்கணிகலம் நல்ல கேள்வி**
**நாவுக்கணிகலம் சத்தியம்**
**மனதுக்கு அணிகலம் தியானம்**
**கரங்களுக்கு அணிகலம் தானதர்மம்**

என்று நான் மணிமொழி என்னும் நூலில் எழுதியிருக்கிறேன். ஆகவே ஒவ்வொருவரும் தானதர்மம் புரிந்து கரங்களை அலங்கரிக்க வேண்டும்.

**தானம்:- தான் உய்யத் தருவது**


**தர்மம்:- பிறர் உய்யத் தருவது**

தானம்:- கோதானம், பூதானம், வஸ்திர தானம், சொர்ணதானம் என பல வகைப்படும். அத்தகைய தானங்களில் உயர்ந்த தானம் எது என்று ஆராய்ந்தால் இன்றியமையாத கடமையல்லவா? எல்லா தானங்களையும் நம்மால் செய்ய முடியாது தானே? அதனால்தான் உயர்ந்த தானம் எது என்று அதனை அறிந்து செய்ய வேண்டும். இந்த அறிவுத் தானம் என்றும் ஒருவனுக்கு துணைப் புரிவது. வாழ்நாள் முழுவது இன்பத்தை நல்குவது. ஆகவே ஒருவனை அறிவுடையவனாகச் செய்கின்ற தானமே உயர்ந்தது. எழுத்தாலும், சொல்லாலும் பிறருக்கு அறிவை புகட்டுவது அறிவு தானமாகும்.

ஸ்ரீ சாது நாராயண ஞான தேசிகர் அருளிய

# அனுபவ ஆனந்த தீபிகை உபதேச வினா-விடை

**உரையாக்கம்: ஜோதி, வீ.கோடீஸ்வரன், காஞ்சிபுரம்**



**61.இறைவனை தரிசித்தால் முத்தி பெறலாமா?**

உதயகாலம் அன்பெனும் நீராடி, உலக வாதனையாம் மாயைத் திரை நீக்கி, இதயத்தாமரையில் எழும் பேரொளி யாஞ் சிதம்பரத்தை தரிசித்தார்க்கே திகழும் முக்தி.

**62.ஆரூரில் பிறந்தால் வீடுபேறு பெறலாம் என்பது எவ்வாறு?**

நம்மை மூடியிருக்கின்ற அன்னமயக் கோசம், மனமயக் கோசம், பிராணமய கோசம், விஞ்ஞானமயக் கோசம், ஆனந்த மயக்கோசம் ஆகிய ஐந்து கோச வழியூர் விட்டு, அழியா ஆரூரில் பிறந்தார்க்கு மாயாப் பிறவி உறா வழிகண்டு வாழந் தோர் வீடுபேறு உற்றவராவார்.

**63. சிவனும், சீவனும் இரண்டு உரைத்து முடிவில் மறை ஒன்றெனக்கூறல் தவ றல்லவா?**

கடவுளும் ஞான சொரூபியே, ஜீவர் களும் ஞான சொரூபிகளே என்று சொன்னால் இரண்டில் ஒன்றுக்கு பிர திபிம்பத்தன்மை உண்டாகும். இல்லை யென்று சொன்னால் பொறிகளும் சித் துக்களேயாக வேண்டிவரும்.

**64. எல்லாஞ் சிவன் செயல் என்று சொல்லி இவ்வுலகத்தில் நல்லார், பொல்லார் என்று வேறுபடுத்துவது பொருந்துமா?**

உலகில் நல்லவர், தீயவர் இல்லாத தேகாதி பிரபஞ்சம் உண்டென்கிற மயக்கம் கொண்டு, பிறவித்துக்கத்தில் அழுந்திக் கிடப்பதை விட்டு தப்பித் துக் கொள்ள வேதங்கள் நல்லார் தீயா ரென்று பிரித்துச் சொல்லியது. அது கடவுளது செய்கை,அன்று, இருவினை யின் பயனைக் கருதாது தாங்கள் செய லற்று இருக்கக் கூறுகிறது.

**65.துக்க, சுகம் நம்மிடத்தில் எங்கு இருக்கிறது?**

நினைவையன்றி துன்பமும், இன்ப மும் தங்கி இருப்பதற்கு வேறு இடம் இல்லை.

**66. தீயவர்களுக்கு ஞானம் விளங்குமா?**

முன் புரிந்தோர்க்கு அல்லால் ஞானம் விளங்காது. பிறவிதோறும் தீயவர்களாய் இருப்பவர்களுக்கு, கொல்லாமை, தவம், தானம், கோயில் வழிபாடு, தீர்த்தமாடுதல், குறி, மந்தி

ரம் போன்ற நெறியில் பலகால் பயின்று பயின்று பின்னர் சிறிது சிறிதாக ஞானம் ஈட்ட முடியும்.

**67. வினையால் வரும் துன்பம் யாது?**

முன்செய்த வினையினால் வந்த உடம்பு நிலைத்து நிற்காது. பின்செய்த வினையால் மனைவி, பிள்ளை, மரு மக்கள் என்று வந்து சூழ்ந்து உயிர்க்கு இதம் செய்யமாட்டார்கள். இதுபோல் அனந்த ஜன்மம் எடுத்து எடுத்து, துன்பப் பட்டோமே தவிர, இதில் இன்பம் ஏது அடைந்தோம்? மீண்டும் துயர் படவே இன்றும், நாளையும் எண்ணுவோமே தவிர, நாம் மாறமாட்டோம்.

**68. இவ்வுலகில் எனது என்று சொல்வதற்கு நாம் எது செய்தோம்?**

மனைவி, மக்கள், செல்வம், மண், விண், ரவி, சசி, காற்று, புனை பொன்னாடை, நவரத்தினங்கள், பூ, காய், கனிகள், மரஞ் செடிகள், நினையும் மனமும், கரணமும், உடலும் இவ்உலகத்தில் தினையளவும் நாம் செய்தது இல்லை. இது நமது என்று சொல் வதற்கு என்ன தைரியம் இருக்கிறது.

–தொடரும்

# வள்ளலார் வரலாறு

## (மாணவர்களுக்கான ஒருவரி வினா-விடை)

**91. சன்மார்க்கப் பாடசாலையில் பயிற்று விக் கப்பட்ட மொழிகள் யாவை?**

தமிழ், ஆரியம்(சமஸ்கிருதம்), ஆங்கி லம் ஆகிய மும்மொழிகள்.

**92. வள்ளலார் நடத்த இருந்த மாத இதழ் யாது?**

சன்மார்க்க விவேக விருத்தி.

**93. வேட்டவலம் ஜமீன்தாரைப், பெருமான் எவ்வாறு ஆட்கொண்டார்?**

அவர் மனைவியரின் பேயையும் நோயையும் நீக்கி.

**94. வள்ளலார் எவ்வூரில் ஒரே நேரத்தில் பல இடங்களில் காட்சி தந்தார்?**

திருவதிகைக் கோவிலில்.

**95. புன்செய் நிலங்களை, நன்செய் நிலங்க ளாகச் செய்தது யாருக்கு?** மணலூர் நடராசனாருக்கு.

**96. ஆறுமொழிகள் தெரியும் என்ற அகந்தையில் வள்ளலாரைச் சோதிக்க வந்தவர் யார்?**

புதுச்சேரி தந்தி அலுவலக மேலாளர் பிநாகபாணி.

**97. வள்ளலார் என்ன செய்தார் ?**

‘எந்த மொழியில் வேண்டுமானா லும் இந்தப் பிள்ளையிடம் கேட்க லாம்‘ என்றார்.

**98. யார் அந்தப் பிள்ளை ?**

தொழுவூர் வேலாயுதனாரின் மூத்த மகன் திருநாகேச்சுரன்.

**99. வள்ளலார் திருடனுக்கும் திருவருள் புரிந்தது எங்கு ?**

குள்ளஞ்சாவடி என்னும் ஊரில்.

**100.’இன்று முதல் புலால் உண்பதைத் தவிர்த்தால், உங்கள் நிலத்தில் ஒன் றுக்கு ஐந்து மடங்காக விளையும்‘ என்று வள்ளற்பெருமான் யாருக்காகக் கூறினார்கள்?**

வடலூர் அருணாசலம், வேங்கடாச லம் ஆகியோருக்காக.

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு.ஞானபிரகாசம் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலய பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

# 90030 34056

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை




எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை -600011

தொலைபேசி: 9003034056, 9600040788

அருள்ஜோதி

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com


## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கிகாரம் பெற்ற (பதிவெண் 24/239-2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மீக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு........................................... | ரூ.2000/- |
| மதிய உணவு ........................................... | ரூ.5000/- |
| மதியசிறப்பு உணவு | |
| (வடை, பாயாசம் உட்பட)............................ | ரூ.8000/- |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

முகவரி: பதிவெண்: __________

## இளைஞர்களுக்கான கட்டுரை...

# வீண் காலம் கழிக்காதீர்

இளைஞர்கள் வள்ளலார் கூறிய வேத வாக்கான வீண்காலம் கழிக்காதீர் என்ற மந்திர வார்த்தையை மனதில் பதிய வைத்துக்கொள்கள், அதாவது காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதை போல இளமை பருவத்திலேயே இளைஞர்கள் சாதனை செய்ய வேண்டும். கிடைத்தற்கு அரியது இளைஞர் பருவம். அக்காலத்தை வீண் காலமாக கழிக்கக் கூடாது, அதாவது பயனுள்ள காலம் என்பது ஜீவகாருண்யம் செய்வது மட்டுமே ஆகும். ஜீவகாருண்யம் என்பது உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தைப் போக்குவதாகும்.

உயிர்களின் துன்பத்தை உணவின் மூலம் போக்கலாம் அல்லது நல்ல வார்த்தைகளின் மூலம் போக்கலாம் அல்லது நல்ல செயல்களான பல்வேறு செயல்பாடுகள் மூலம் தன்னால் எப்படி செயல்பட முடியுமோ அப்படி செயல்பட்டு உயிர்களின் துன்பங்களை நீக்கலாம். இளைஞர்களில் பலர் ஆன்மீகம் என்பது வயதானவர்களுக்கானது என்று நினைத்துக்கொண்டு வீண் காலம் கழிக்கிறார்கள். அது தவறு, எப்படியென்றால் இறைவனை இளைர்களன்தான் தன்னுடைய இறை ஆற்றலால் மிக விரைவில் அடைந்து, உயரிய நிலையான மரணம் இல்லா பெருவாழ்வை அடைய முடியும். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய முடியாது.

**தெருவில் கிடந்து விளையாடும் சிறியேன் தனக்கே**
**மெய்ஞான சித்தியளித்த பெருங்கருணை தேவே**
**உலக திரள் எல்லாம் மருவி கிடந்து வாழ்வதற்கு**
**வாய்த்த தருணம் இது என்றே வாயே பறையாய் அறைகின்றேன்**
**என்தாய் கருணை வளத்தாலே.**

என்று வள்ளல் பெருமான் கூறியது போல மிக முக்கியமாக இளைஞர்கள் இளமைப் பருவத்தை இறைவனுக்காக பயன்படுத்த வேண்டும். இளமைப் பருவத்தில்தான் சூரியனை நன்றாக கண்ணில் பார்த்து வழிபட முடியும். அதைப் போல இளமைப் பருவத்தில்தான் இளைஞர்கள் பல்வேறு சாதனைகளை செய்ய முடியும்.

இளைஞர்கள் ஒன்றை மட்டும் நன்கு உணர்ந்து செயல்படவேண்டும். அது என்னவென்றால் மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்பது ஆகும். நாம் என்ன வேலை செய்தாலும் மக்களுக்கு அது நன்மை மட்டுமே செய்வதாக இருக்க வேண்டும். மேலும் மிக முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது இளைஞர்கள் செய்ய வேண்டிய பெரும் சேவையானது, அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருனை அருட்பெருஞ்ஜோதி என்ற இந்த மகா மந்திரத்தை உச்சரிப்பதுதான் உலகில் எல்லோருக்கும் கருணையை வரவைப்பதற்கான பெரும் சேவையாகும். இதனால் உலகம் கருணையால் மகிழ்ச்சி என்னும் இன்பக் கடலில் நீந்தும். அனைவரும்



மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்பதை உணருவார்கள்.

ஒவ்வொருவரம் தொண்டு செய் வார்கள். இதனால் வள்ளலார் வீடுகள் தோறும் விதி நெறி விளங்க என்று கூறுவது போல ஒவ்வொரு வீடும் தர்மச் சாலையாக மாறும். உலகில் அனைவரும் அன்ன தானம் செய்வார்கள். மக்களின் பசிப்பணி மட்டும் அல்ல மற்ற உயிர்க ளான ஆடு, மாடு, கோழி, எறும்பு, பறவை கள், நீர்வாழ்வன போன்ற அனைத்து உயிர்களின் பசிப்பிணியும் போகும்.

இன்பம் பெருக்கெடுத்து ஓடும் சொர்க்கத்தை வேறெங்கும் தேடிப்போக வேண்டும். இந்த உலகமே சொர்க்கமாக மாறும். துன்பம் என்ற சொல்லே வழக் கில் இல்லாமல் போகும், எந்தவொரு உயிர்களாலும், எந்தொரு உயிரும் கொலை செய்யப்படாமலும், துன்புறுத்தப்படாம லும் இன்பமாக வாழும். அனைத்து உயிர் களும் இறை நிலையை அடைந்துவிடும்.

அருட்பெருஞ்ஜோதியே பழனி முருகா சரணம், அருட்பெருஞ்ஜோதி அருட்பெ ருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட் பெருஞ்ஜோதி.

## ஓவியங்கள்:

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.



**கபில் அச்சு,**
**2–ம் வகுப்பு, மாதாவரம்**



**திவ்யன், கொசப்பேட்டை**
**7–வகுப்பு**

குறிப்பு:

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற தாங்களும், தங்களின் அனுபவத்தை நமது இல்லத்திற்கு வருகின்ற சேவதாரிகளிடம் தாங்கள் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அனுப வத்தை பகிர்ந்து கொண்டு பதிவு செய்வதன் மூலமாக தங்களின் அனுபவமானது அருள்ஜோதி புத்தகத்தில் வெளியிடப்படும்.**

# அன்னதானம் அனுபவங்கள்

எங்களது பெயர் எமோரஸ் வசந்தி. நாங்கள் வெற்றி நகரில் வசித்து வருகிறோம். கடந்த 4 வருடமாக அன்னதான பணியில் ஈடுபட்டுயிருக்கிறோம். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள் ஆசிர்வாதத்தினாலும், வள்ளல் பெருமானாரின் தனிப்பெரும் கருணையினாலும், நமது அருள்ஜோதி அன்ன ஆலய சதீஷ் ராஜ் அடிகளார் ஐயா அவர்களின் அருள் எண்ணத்தினாலும், நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு அன்னதானம் செய்கின்ற அன்பு உள்ளங்களின் ஆன்மீக அனுபவங்கள்:–

அன்பென்றால் அன்னதானம். கட்டுப்பாடுகள் நிபந்தனைகள், சாதி, சமயம், இனம் போன்ற பேதங்களற்ற, ஈவிறக்கமும் கருணையும் தான் உண்மையான மனித நேயம். மெய்யான அன்பு. அப்படிப்பட்ட அந்த அன்பின் உருவம் தான் இறைவன். அன்னதானம் செய்யும்போது நாம் எப்படி செய்கின்றோம் என்பது தான் முக்கியம். ஏதோ உணவை அளித்தோம் என்று இல்லாமல், தானே என்று இல்லாமல் அன்பை வாரிக் கொண்டு அன்னதர்மம் செய்ய வேண்டும். இங்கே நாம் அன்பை தான் விதைக்கின்றோம். உணவின் வழியே அன்பு என்று புரிந்துக்கொள்ள வேண்டும். அன்னதானம் என்பதும் சாதாரணம் அன்று. இதை நாம் செய்ய பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

மிகுந்த பக்தியுடனும், அன்புடனும், ஈடுபாட்டுடனும், ஒருவருக்கு கொடுக்கும் அன்னதானம், எல்லா உயிருடனும் ஒரு ஆழமான தொடர்பை ஏற்படுத்துகிறது. அதை பக்தியுடன் கொடுப்பது ஏன் முக்கியம் என்றால் நம்மிடம் இருந்து பெறுபவர், கொடுப்பதற்கான வாய்ப்பை நமக்கு அளிக்கிறார். இது சாதாரண விஷயமல்ல இங்கே நாம் அன்னத்தைக் கொடுக்கவில்லை ஒருவருக்கு உயிரைக் கொடுக்கின்றோம். நீங்களும் என்னைப் போன்றே அன்னதர்மம் செய்யலாம். மக்களின் பசியினை அகற்ற நாள்தோறும் அன்னதர்மம் செய்து வரும் அருள் ஜோதி அன்ன ஆலயத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

# அருள்ஜோதி தொலைக்காட்சி பார்க்கும் அன்பர்களின் ஆனந்த அனுபவங்கள்

*எங்களது பெயர் குப்பன் வினோதினி நாங்கள் எர்ணாவூரில் வசித்து வருகின்றோம். முதலில் சில குறிப்பிட்ட சொற்பொழிவுகள், பாடல்கள் இருந்த நிலையில் இப்பொழுது பெரிதும் அருள்ஜோதி தொலைக்காட்சி வளர்ந்து விட்டது. எனது குழந்தைகள் அதில் வரும் பாடல்கள், கதைகள், சன்மார்க்க சொற்பொழிவுகள், அன்னதான நிகழ்வுகள் மற்றும் யூடியூப் வாயிலாக அதற்கு மறுநாள் பார்க்கும் பதிவேற்றங்களும் கண்டு ஆனந்தமாக இருக்கின்றார்கள்.*

*எனது குழந்தைகள் சிறு வயதில் இருந்தே நல்ல நல்ல வார்த்தைகளை கேட்டு வளர அருள் ஜோதி தொலைக்காட்சி மிகவும் துணை புரிந்து கொண்டிருக்கின்றது. எல்லா வயதினருக்கும் பொழுது போக்காக செயல்படும் ஒரு சாதனம் தொலைக்காட்சி தான். அதில் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. ஆனால் தொலைக்காட்சியில் இவ்வளவு நன்மையை அள்ளிக் கொடுத்த அருள்ஜோதி அன்ன ஆலய அன்பு உள்ளங்களுக்கு என்னுடைய நன்றிகள்.*

# அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு வருகின்ற அன்பர்களின் அனுபவங்கள்



எனது பெயர் சுப்பஜா நான் பெரம்பூரில் வசித்து வருகிறேன். நான் மாதம் ஒருமுறை அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு அரிசி வழங்க செல்வேன். அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் ஓர் இறைச்சிந்தனையை ஏற்படுத்துகின்ற பக்தி ஆனந்தம் உணரப்படுகிறது. அருள்ஜோதி அன்ன ஆலய பிரகாரங்களின் தூய்மையையும், அழகையும் கண்டு வியந்தது உண்டு. நம்பிக்கையை மனதில் நிலைநிறுத்தி வழிபாடு செய்வதற்கும், இறை யாற்றலை மனதில் ஏற்படுத்துவதற்கும், தவம் புரிவதற்கும் ஒரு சிறந்த ஆலயமாக திகழ்கின்றது.

# அருள்ஜோதி புத்தகம் வாசிக்கும் அன்பர்களின் ஆனந்த அனுபவங்கள்

எங்களின் பெயர் ஜோதிஷ்வரி, சஞ்சய்குமார் நான் எர்ணாவூரில் வசித்து வருகிறேன். நான் கடந்த 20 வருடங்களாக அருள்ஜோதி புத்தகத்தை படித்து வருகிறேன். புத்தகத்தில் வருகின்ற ஒவ்வொரு வார்த்தையும், என் மனதில் ஆழமாய் பதிகின்றது. உண்மையில் அருள்ஜோதி புத்தக வாசிப்பு என்பது அறிவியல் பூர்வமாக நமக்கு எத்தனையோ நன்மைகளை அள்ளித் தரும் ஒன்று என்பதை நம்மில் பலரும் அறிவதில்லை. எனது நேரத்தை இணைய தேடல்களுக்குள் சிக்கி பொழுதை கழித்து நேரத்தை விரயம் செய்து கொண்டிருந்தேன். ஆனால் அருள்ஜோதி புத்தகம் எனது கைக்கு கிடைத்த பொழுது இரவின் அமைதியில் கூட என்னை ஈர்த்திழுப்பது அருள்ஜோதி புத்தகமே.



சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாக
தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**11. சத்தியநிர் வாணத்தால் தற்போதத் தாக்கறுத்து
வைத்துவழி காட்டு மறைப்புலவன்–சுத்தன்
தமிழ்க்குரிசிற் சீகாழிச் சம்பந்தன் என்பான்
எமக்கருளிச் செய்தது) இது**

**இந்நூலின் ஆசிரியர் தனது அருட்குருவை எவ்வாரெல்லாம் போற்றுகின்றார்? மற்றும் இந்நூலின் சிறப்பு என்ன?**

வேதங்களையெல்லாம் ஓதாமல் உணர்ந்த ஞானப் புலவரென்றும்; தமிழினது இலக்கணமெல்லாம் அளவிட்டறிந்த தமிழ் வேந்தர் என்றும்; சீகாழி திருஞான சம்பந்தப் பிள்ளையார் என்று யாவராலும் புகழ்பெற்ற ஞானகுரு, ஒளிவு மறைவு இல்லாமல் சத்திய ஞான உபதேசத்தால் போதத்தை ஒன்றோடும் பற்றாது ஒழித்து, சிவத்தோடு இரண்டறக் கலக்க வைத்து, தன்பால் வந்தடைந்தோர்க்கு தம்முள்ளே தாமே நிறைந்து முக்தியைக் காட்ட அருளிச் செய்ததுதான் இந்நூலின் சிறப்பாகும்.

**12. தாக்கற்ற பூரணத்தில் சந்தற்ற தம்மைமலம்
நீக்குந் துயரகல நேசித்தோர்–பார்க்கும்
வழிபலநாம் பைமறித்த வாறுநீ மாளா
ஒழிவினில் ஒடுக்கம் உரைப் போம்.**

**ஒழிவில் ஒடுக்கம் எனப் பெயர் வந்ததென எவ்வாறு கூறுகின்றார். பைமறித்தவாறே என்று சொல்வது எதனால்? இறைவன் நம்மோடு இரண்டறக் கலந்து நிற்பான் எப்போது?**

இறைவன் எல்லாவற்றோடும் கூடியிருந்தும் ஒன்றோடும் தாக்கற்று பரிபூரணமாய் இருக்கிறான் என்றாலும், ஆணவம் நீக்கிய விடத்து இரண்டறக் கலந்து, தம்மை அந்த ஐக்கியத்தைத் தெரியவொட்டாது மறைந்திருக்கிறான். இரண்டு படுக்கும் இவ்வாணவமலம் துன்பம் அகன்று ஏக அன்பு கொண்டோராக இருப்பர்.

நூற்பயனைக் கூறும்போது, இவ்வுலகில் மறைத்துக்கூறும் சாத்திர நெறிகள் பற்பல உள்ளது. அவைபோல் மறைத்துக் கூறாது பையை விரித்து அதனுள் இருந்த பொருள் ஈதென்று மறைப்பு இல்லாமல் காட்டுவதுபோல் இந்நூள் காட்டுகிறது.

ஆன்மா கெடாது அதனது ஆணவம் மட்டும் கெட்டு, ஒடுங்கும்நெறி கூறியதால் இந்நூலுக்கு ஒழிவில் ஒடுக்கம் எனப் பெயர் பெற்றது.

**13. சுருதி குருவாக்குச் சுவாநுபவம் மூன்றும்
சரியொத்த போதமுனைச் சார்வைத்– தெரிய
உரைத்தநூற் பேர்கேள் ஒழிவில் ஒடுக்கம்
விரித்தநூற் கெல்லாம் விதை.**

**சுருதி (வேதம்), குரு உபதேசம், சுயஅனுபவம் இம்மூன்றையும் விளக்குக?**

மந்தம், மந்ததரம், தீவிரம் என்னும் பக்குவம் உடையோர்க்குப் பலவித ஐயங்கள் தோன்றும்; ஆனால் தீவிரதா பக்குவம் உடையோர்க்கு குரு உபதேசம் பெற்ற மாத்திரத்தில் ஞானம் உண்டாம்.

என்னதான் வேதம் கற்றாலும், ஞான உபதேசம் பெற்றாலும், சுய அனுபவம் இல்லையெனில் பிரயோசனம் அற்றுப் போகும் என்பதாம். இம்மூன்றும் சரி யொத்த நிலையில் இருக்க வேண்டும் என்பர்.

**14.** தந்திரகலை, மந்திரகலை சார்பழுந்தச் சாற்றமது
மந்திர சரியாதி மார்க்கமிது–முந்தைத்
தபதி விரத்தியரைச் சார்பழியச் சாற்றும்
உபதேசம் என்றே உணர்.

**தந்திரகலையும், மந்திரகலையும் கற்றவர்களால் ஆணவ மலத்தில் அழுந்துவர் என்பதும்; உபதேச முறையால் ஞானம் பெறுவர் என்ப தும் விளக்கிக் காட்டுக?**

வேதியல் முறைகளைச் செய்பவர்கள் தந்திரகலை கற்றவரென்றும்; கிரியைகளுக் குரியவராகிய செய்பவர் மந்திரகலை கற் றவரென்றும்; இவ்விரண்டும் ஆன்மாவை மேன்மேலும் மலச்சார்பில் அழுந்தச் செய்யும் சரியை, கிரியை, யோக நெறிக ளாகும்.

முற்பிறவில் எவ்வித ஆசையும் இல்லா மல் தவம் செய்தவர்க்கு அத்தவத்தால் உட்பற்று அறும்படி கூறும் ஞான உபதே சமாகும். இதுவே உபதேச கலையாகும்.

**15.** உடற்குயிர்போல் கண்க்(கு) இமைபோல் ஊசிநூல் ஒத்து
விடிற் புலிதீ பாம்பினில் வீழ் வார்க்காம்–சுடச்சுடினு
வாழைக்கா காவேதி மட்கலத்துக் காகாவா(று)
ஏழைக்கா காதது இது.

**ஞானாசிரியரிடம் மெய்ப்பொருளை கேட்கும் தகுதியுடையவர்கள் யாவர்? அதிதீவிர பக் குவன் என்பவன் குருவிடம் எப்படி நடந்து கொள்வான்?**

அதி தீவிரப் பக்குவன் தேகாபிமா னம் விட்டு குருவை மெய்ப்பொருளா கக் கருதி, உடம்பை உயிர் அபிமானிப் பது போலும்; கண்ணை இமையானது காத்தல் போலும்; ஊசி சென்ற இடந் தோறும் சரடு பின் சேறல் போலும்; ஞானாசிரியரைப் பிரியாது நின்று, அவர் திருமேனியை அபிமானத்தும், பாதுகாத் தும், அவர் திருவுள்ளக் குறிப்பின் படியே செல்ல வேண்டும். அவர் புலி, தீ, பாம்பா திகளில் விழச் சொல்லினும் பின்னிடை யாது விழுதல் வேண்டும்.

இதுபோன்ற அதிதீவிர பக்குவர்க்கே ஒழிவில் ஒடுக்கம் நூல் பயன்பெறும், மற் றவர்களுக்கு அதாவது அபக்குவர்க்கு இந்நூல் கொடுப்பினும் அனுபவம் கைகூடாது என்பதாம்.

–தொடரும்



# உயிரின் உரிமை

## உயிரின் இயக்க மையம்

### இராகவேந்திரர்

நவாப் சாகிப் மசுத்கான் இராகவேந் திரரைச் சோதிக்க எண்ணி ஒரு தட்டில் மாமிசத்தை வைத்து, துணியால் மூடி "இராகவேந்திரருக்கு என் பரிசு" என்று கூறி அவர் முன் வைத்தான். "பரிசு ஏன் மூடியிருக்கிறது? இதனை நான் பார்க்கலாமா?" என்று இராகவேந்திரர் கேட்க, நவாப் சாகிப்பின் பணியாள் பரி சினைத் திறந்து காட்ட மாமிசம் மலராக மாறியது. இதனைக் கண்ட நவாப்சா கிப் இராகவேந்திரரின் காலில் விழுந்து வணங்கி மன்னிப்புக்கோரி, இராகவேந் திரருக்கு அவர் விரும்பிய மாஞ்சாலி கிராமத்தைப் பரிசளித்தார். அதுதான் இராகவேந்திரர் ஜீவசமாதி அடைந்த மந்தராலயம். இன்றும் இஸ்லாமியர் இங்கு வழிபாடு செய்கிறார்கள்.

### கபீர்தாஸர்

இஸ்லாமியக் குடும்பத்தில் இந்துவாக வாழ்ந்தார் கபீர்தாஸர். அவருக்குத் திரும ணம் முடிந்தது. அவரது சித்தப்பா வீட்டில் அவரை விருந்துக்கு அழைத்திருந்தார்கள். கபீர்தாஸர் தன் மனைவியை அழைத்துக் கொண்டு விருந்துக்குச் சென்றார். அவருக்கு விருந்தாக்க ஒரு பசுக் கன்றைக் கட்டி வைத் திருந்தார்கள்.

அந்தப் பசுக்கன்றைப் பார்த்த கபீர்தாஸர், "உணவுக்காக ஓர் உயிரைக் கொல்வதையோ, அதன் இறைச்சியை உண்பதையோ என்னால் அனுமதிக்க இயலாது. நான் கற்றவேதங்கள் இதனை ஏற்றுக்கொள்வதில்லை" என்றார்.

இதனைக் கேட்ட ஒருவர் "உயிர்கள் அனைத்தும் மனிதர்களுக்காகவே படைக் கப்பட்டிருக்கின்றன என்பதுதான் எங்கள் வேதம்" என்றார்.

## உங்கள் கவனத்திற்கு

**மாதப்பூசத் திருநாள்:– 24–05–2023, பூஜை நேரம்:– மாலை 6:00 மணி**

**அனைவரும் வருகை தந்து வள்ளல் பெருமானாரின் அருள் பெற வேண்டுகின்றோம்**

அன்புடையீர் வணக்கம்! நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில், சன்மார்க்க அறக்கட்டளையின் சார்பாக உலக சமாதானம் மற்றும் மக்கள் உடல் ஆரோக்கியம் பெற ஒவ்வொரு வியாழக்கிழமையும், கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகின்றது. இந்த பிரார்த்தனையில் கலந்து கொள்வதன் மூலம் உங்களுடைய எல்லாவிதமான பிரச்சனைகளும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளினால் தீர்க்கப்படுகின்றன. அதனால் தாங்களும் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளோடு, வாழ்வில் எல்லா நலங்களும், வளங்களும் பெற்று குறையின்றி வாழ வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். வருகை தந்து வள்ளல் பெருமானாரின் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

# அருள்ஜோதி TV

அருள்ஜோதி

Aruljothi TV APP

**TCCL கேபிள் TV Channel No : 125**

**நிகழ்ச்சிகளின்**
**சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...**













**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**


**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

**ARULJOTHI SANMARKKA TRUST**
**INDIAN BANK**
**A/C.No.:6206014778**
**IFSC CODE: IDIB000P034**
**BRANCH : PERAMBUR**


**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012

# நீங்களும் அன்னதர்மம் செய்யலாம்

ஒவ்வொரு இல்லறத்தாரும் மாதம் மூன்று கிலோ அரிசியும், அரை கிலோ பருப்பும் கொடுப்பதன் மூலம், மாதம் முப்பது நாளும் தினமும் ஒருவருக்கு அன்னதர்மம் செய்ததன் பலனைப் பெறமுடியும். தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் இத்திட்டத்தில் சேர்வதன் மூலம் சென்னையிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் நாள்தோறும் அன்னதர்மம் நடைபெறச் செய்யலாம். இந்தப் புண்ணிய தொண்டில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் முகவரியை ஆலயத்துக்கு தெரிவித்தவுடன் ஆலயத்தைச் சேர்ந்த சேவாதாரிகள் தாங்கள் செலுத்தும் தருமத்தை நேரில் வந்து பெற்று கொள்வார்கள். மேலும், தங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் போன்ற சிறப்பு நாட்களில் அன்ன ஆலயத்தின் மூலம் தாங்கள் விரும்பும் ஆலயத்தில் அன்னதர்மம் செய்யலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

## அன்ன தர்மத்தின் சிறப்புகள்

1.அன்ன தருமம் செய்வதன் மூலம் இறைவன் அருளைப் பெறலாம்.

2.நம் சந்ததியினருக்குச் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுத்தலே.

3.அனைத்து நோய்களும் நீங்க அருமருந்து அன்னம் கொடுப்பதே ஆகும்.

4.மனக்குறைகள் நீங்கி மகிழ்வுடன் வாழவைப்பது அன்ன தருமமே

5.தொழில் சிறந்து விளங்க அன்னதருமம் செய்வோம்.

6.கடன்கள் நீங்கி மன அமைதி பெற அன்னதர்மம் செய்வோம்.

7.போதும் என்ற மனநிறைவுடன் ஓர் ஆன்மா கூறுமளவுக்கு ஒரு தருமம் உண்டென்றால் அது அன்ன தருமமே. அன்ன தருமம் என்ற திறவுகோலைக் கொண்டுதான் எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவிக்க முடியும். நம் சந்ததியினருக்கு நாம் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுப்பதே.



**இந்தப் புண்ணியத் தொண்டில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

**பசி தீர்ப்பது பரம புண்ணியம்**


தயவுத்திருமதி. **தனலட்சுமி அம்மையார்,**

எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

**தொலைபேசி: 044-25570770 9003034056**



Owned, Published: Thavathirumathi. Dhanalakshmi Ammaiyaar, Published from No.:33, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 and Printed by Bharani-Press Editor: Thayavuthirumati. Dhanalakshmi Ammaiyaar